செ.வெ.எண்! 1042

நாள்! 26/11/2010

# செய்திக் குறிப்பு

## மீன்வளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்

மீனவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் புதிய மீன்பிடி முறைகளை பயிற்சி அளித்திட டாட்டா குழும நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் சர்வதேசத் தரத்தில் ஒரு பயிற்சி நிறுவனத்தினை நிறுவிட தமிழக முதலமைச்சர் அவர்கள் 2008ம் ஆண்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் ஒரு அறிவிப்பினை வெளியிட்டு ரூ.1.00 கோடியினையும் ஒதுக்கீடு செய்தார்.

மீன்வளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம் என்ற பெயரில் ஒரு குழுமம் 2008ல் நிறுவப்பட்டது. டாட்டா மற்றும் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தமிழகக் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நவீன மீன்பிடி முறைகளை அறிமுகப்படுத்திட தொழில் நுட்பத்தினை டாட்டா குழுமம் தரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி விரிவான தொழில் நுட்ப திட்ட அறிக்கையினை தயாரித்திட டாட்டா குழுமம் ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்து அக்வாகல்சர் பவுண்டேஷன் ஆப் இந்தியா நிறுவனத் தலைவர் டாக்டர் எம். சக்திவேல் மூலமாக இப்பணியினை மேற்கொண்டது.

டாட்டா குழுமத்தின் பிரதிநிதி டாக்டர் எம். சக்திவேல் அவர்கள் **மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.பி.பி. சாமி** அவர்களிடம் கடல் மீன் வளர்ப்பு, மீன்பதப்படுத்துதல், மாற்றுமுறை மீன்பிடிப்பு, ஆகிய மூன்று தலைப்புகளில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மீனவளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்தின் 4வது மேலாண்மைக்குழு கூட்டத்தில் இன்று (26.11.2010) அளித்தார். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அரசுச் செயலர் திருமதி எம்.பி.நிர்மலா இ.ஆ.ப., மற்றும் மீன்துறை இயக்குநர் திரு கே. செல்லமுத்து, இ.ஆ.ப. ஆகியோர் பங்கேற்றனர்.

ஒம்/ ---
(எம்.பி. நிர்மலா)
அரசு செயலாளர்,
கா.ப.பா.மீன்வளத் துறை.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

26.11.10